**கருத்தமைதி – நவம்பர் 2020**

**பிரான்சிஸ்கன் மனமாற்றம் ஏ ழைகளில் இறைவனின் இருப்பைக் காண்பதே**

**தூய ஆவியின் பாடல்:**

வானம் திறந்து வெண்புறா போல....

**முன்னுரை:**

உலகம் மிக விரைவாக இயங்கிக் கொண்டிருக்கிறது. முன்னேற்றம் என்ற முனைப்பில் முனைந்து செல்கிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் அறிவியல் முன்னேற்றங்கள் அடுக்கடுக்காக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. மனிதன் தனது பங்கிற்கு உலகை விரல் நொடியில் கொணர்ந்து வித்தை காட்டுகிறான். இறைவனோ கண்ணிற்குப் புலப்படாத பொடிப்பூச்சியைக் கொண்டு மனிதனின் கண்ணில் விரலை விட்டு ஆட்டி உலகத்தையே கதற வைக்கிறார். என்னே உலகம்! இப்படியான உலகில் மனிதராகப் பிறந்த நாம் துறவிகளாக உருவேற்றம் பெற்ற நாம் இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து இறைவழியில் நடக்க விழைகிறோம். நாமும் புயலிடை மலராக எதிர் நீச்சலிடும் மீன்களாக வாழ்வதை விடுத்து தந்தை பிரான்சிஸைப் போன்று இறைஞானம் பெற்றவர்களாக மனதில் உரம் கொண்டவர்களாக நற்செய்தித் தூதுவர்களாக வாழ வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். நமது துறவற குடும்பத்தின் இரண்டாம் பாதுகாவலரான புனித பிரன்சிஸின் முன்மாதிரிகை நமதாகட்டும். அவரது வீரமும், விவேகமும், செயல்திறனும் கொண்ட இறைவாழ்வு நம்முன் சுடர்விட நமது இதயங்களைத் திறப்போம். இந்த சில மணித்துளிகள் நம் தந்தையின் மனமாற்ற வாழ்வின் பரிணாமங்களை, படிகளை உணர்வோம். நம் செயலில் அவை விளங்கிட முயற்சி செய்வோம்.

**புனித பிரான்சிஸ்குவின் மனமாற்றத்தின் பொருள்:**

மனம் மாறுங்கள்; விண்ணரசு நெருங்கி விட்டது (மத் 4:17) என்று அறைகூவல் விடுக்கிறார் அண்ணல் இயேசு. இந்த அழைப்பு நம் எல்லோருக்குமே உரியது. ஏனெனில் நாம் அனைவரும் பாவிகள். கட்டாயம் மனம் மாற வேண்டும். ஆனால் நம் தந்தை பிரான்சிஸின் மனமாற்றம் இவ்வகையைச் சார்ந்ததன்று. அவர் யாரையும் ஏமாற்றவில்லை. பழிபாவச் செயல்களில் ஈடுபடவில்லை. பெற்றோரை அவமதிக்கவில்லை. நம்மைப் போன்று தீய செயல்களில் ஈடுபடவில்லை. பின் ஏன் மனம் மாறவேண்டும்? புனித பிரான்சிஸின் மனமாற்றம் என்பது முறிந்த உறவைப் புதுப்பித்துக் கொண்டது. இதைத் தன் வாழ்வில் உணர்ந்தார். அதைப் புரிந்து கொண்டதுதான் அவர் மனமாற்றம்(எசாயா 58:1-12) கூறுவது போன்று அவரின் மனமாற்றம் என்பது ஏழைகளில் இறைவனின் இருப்பை உணர்வதே. ஏழைகள் வாழ்வில் மீட்புப் பெறுதலே அவரது மனமாற்றத்தின் அடையாளம் தந்தை பிரான்சிஸின் மனமாற்றம் என்பது சிலுவையில் அறையுண்ட

இயேசுவாக மாறுவதே. பிரான்சிஸ் உலகிற்கு இறந்தார். ஆனால் கிறிஸ்துவில் உயிர் வாழ்கிறார் என்று **புனித செலோனா தாமஸ்** கூறுகிறார். தந்தை பிரான்சிஸின் ஆன்மாவில் கிறிஸ்து வாழ்கிறார். உலக இன்பங்கள் சிலுவையாகத் தோன்றின. அவரது இதயத்தில் கிறிஸ்துவால் ஊன்றப்பட்ட சிலுவையை பிரான்சிஸ் சுமக்கிறார். இதுவே அவரது மனமாற்றம். மனமாறியபின் தந்தை பிரான்சிஸ் விடுதலை அடைந்தவராகக் காணப்பட்டார்.

**புனித பிரான்சிஸின் மனமாற்றம் :**

## Conversion = cun+vertio=turn with;with turn திருப்புமுனை

கடவுளே இதை ஆரம்பிக்கின்றார். அவர் மனிதனைத் தன் ஆளுகைக்கு உட்படுத்துகிறார். வாழ்விற்குப் புதிய ஒளியைத் தருகிறார். புதிய விழிப்புணர்வும் தருகிறார். நாம் எவ்வாறு பலவீனமாக இருந்தாலும் இறைவனே நம்மைப் பலப்படுத்துகிறார். தந்தை பிரான்சிஸின் மனதை ஆட்கொண்டு தன்வயமாக்கி மனமாற்றம் தந்தார். தந்தை பிரான்சிஸின் மனமாற்றம் என்பது முறிந்த உறவை புதுப்பித்தல் அறநெறியைச் சாரந்ததல்ல. மாறாக உறவைப் புதுப்பித்தலை தன் வாழ்வில் உணர்ந்ததே. தனிமை நிலையிலிருந்து அமைதியை நோக்கிய பயணம். சகோதரன் பிரான்சிஸாகிய நான் இவ்விதமாகத் தவம் செய்ய ஆரம்பிக்க ஆண்டவர் அருளினார். நான் பாவத்தில் இருக்கும்போது தொழுநோயாளரைப் பார்ப்பது மிகக் கசப்பாகத் தோன்றியது. ஆண்டவரே என்னை அவர் மத்தியில் இட்டுச் சென்றார். நானும் அவர்கள் மத்தியில் இரக்கம் கொண்டேன். அவர்களிடமிருந்து திரும்பியபோது எனக்குக் கசப்பாகத் தோன்றியவை என் உடலுக்கும் ஆன்மாவுக்கும் இனிமையாக மாறின. அதன்பின் சற்றும் தயங்காமல் உலகை விட்டுச் சென்றேன். ஊற்று இறுதிமுறி எண்1-3 பக்:103

தவம் என்பது

தவம்- → தவமுயற்சிகள் / மனமாற்றம் = நல்லதைச் செய்தல்

- இறுதிவரை நல்லது செய்தல்; இப்படி நல்லவற்றைத் தொடர்ந்து செய்ய பிரான்சிஸ் அழைக்கப்பட்டார்
- REAL METANOIA நன்மை செய்வதே எனது இயல்பாக மாறுதல்.
- தவம் என்பது ஒரு பயணம். தந்தை பிரான்சிஸ் பெரூஜியா போரில் பலரைக் கொன்றிருக்கலாம். பணக்காரத் தன்மையில் உழன்றிருக்கலாம். இத்தகைய மனநிலையில் இருக்கும்பொழுது தொழுநோயாளிகளை வெறுத்தார். மனமாற்றத்திற்குப் பிறகு பாவம் பற்றிய புதிய கண்ணோட்டம் பெறுகிறார்.

தான் சிதைந்திருப்பதை உணர்ந்தார். இதன்பின் அவருக்குக் கசப்பாகத் தோன்றியவை இனிமையாக மாறின. இனிமையானது எல்லாம் கசப்பாக மாறிற்று.

**பாடல்**

**மனமாற்றத்தின் படிகள்**

**அ. சிறைவாசம்**

தந்தை பிரான்சிஸ் பெரூஜியா போரில் கலந்து கொண்டு தீவிரமாய் போர் புரிந்தார். அதில் சிறைப்பட்டு ஓராண்டு காலம் இருந்தார். சிறையில் மற்றவர்கள் தங்களுக்கு நேர்ந்த இழுக்கினை எண்ணிப் புலம்பிக் கொண்டிருக்கும் போது தந்தை பிரான்சிஸ் தன்னைப் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலியைக் கண்டு நகைப்பார். நான் ஒரு நாள் உலக முழுமையாலும் போற்றிப் புகழப்படுவேன் என்று கூறி நகைப்பார். தான் சிறந்த வீரனாகப் புகழடையப் போவதை எண்ணி மகிழ்வார். பெரூஜியா போருக்குப்பின் தனது முதல் தரமான போர்க்கவசங்களை வறுமையின் கொடுமையிலிருந்த ஏழை போர்வீரனுக்குக் கேட்காமலேயே கொடுத்துவிட்டார். அன்று இரவு கனவில் அவருக்கு வாளும் படைக்கலன்களும் ஆண்டவர் கொடுக்கும் நிகழ்வு காட்சியாக கொடுக்கப்பட்டது. மிக்க மகிழ்வுடன் விழித்தெழுந்தார். ஆனால் இது உண்மையல்ல என்பதை விரைவில் அறிந்து கொண்டார். இப்பெருங்கனவோடு அப்பூலியாவுக்கு சிலுவைப்போருக்காகப் பயணம் செய்தார்.

பெரூஜியா போருக்குப்பின் சிறைக் கைதியாக முடக்கப்பட்ட பிறகு உடல் மெலிந்து நோயுற்று அசிசிக்குக் கொண்டுவரப்பட்ட தந்தை பிரான்சிஸ் நீண்ட நாட்கள் படுக்கையில் இருந்தார். தன்னுடைய அகந்தையும் ஆணவமும் உடல் நோயால் தளர்வுற்றதை உணர்ந்தார். இத்தனை நாள் இருந்த நினைவலைகள் மாறியிருப்பதை உணர்ந்தார். மலைப்பகுதிகளும் குன்றுகளும் இயற்கையின் விளைச்சல்களும் அவர் கண்களுக்கு அழகாகத் தென்பட்டன. இம்மாற்றத்தை உணர்ந்த அவர் தனது முந்தைய ஆடம்பர வாழ்வையும் அதன் வழிகளையும் விட்டுவிட நினைத்தாலும் ஒரு வீரனுக்குரிய மகிமையையும் அதனால் கிடைக்கும் பதவிகளையும் விட்டு விலக மனமில்லாமல் இருந்தார். ஆனால் இடைவிடா முயற்சியால் இவற்றை விலக்கி வெற்றியடைந்தார். அவன் வழியை முள்ளால் அடைப்பேன் சுவர் ஒன்றை எழுப்புவேன் அவனால் வழி கண்டுபிடித்துப் போக இயலாது.[ஓசே2:6]

**சிந்தனை**

- பல நேரங்களில் வாழ்வின் சோதனைகளால் வீழ்ந்தாலும் தந்தை பிரான்சிஸைப் போன்று இறை ஆற்றலோடு எழுந்திட முயல்கிறோமா?

- இறைவன் நமது பழைய வாழ்வை மீட்பு எனும் முள்ளால் அடைப்பதை உணர முடிகிறதா?
- ஆடம்பர வாழ்வைச் சுற்றி இறைவன் முள்ளால் அடைப்பதை உணரும் காலமா?
- சபை ஒழுங்குகள், பிரான்சிஸின் வாழ்க்கை வழிகாட்டுதல், மற்றவர் முன்மாதிரிகைகள் மூலம் நமது மாசு படிந்த வாழ்வைச் சுற்றி சுவர் எழுப்பப்பட்ட போதும் அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்துகிறோமா?

**ஆ. மனமாற்றத்தின் தொடக்கம்:**

ஒரு நாள் துணையாளர் ஒருவரோடு இத்தாலியை அடையும் நோக்கோடு பொலிங்கோவிலிருந்து ஸ்பொலேட்டோ நோக்கிச் சென்றார். ஸ்பொலேட்டாவில் இரவு தங்கினார். இவர் உறங்கும்போது முன் போல் அசரீரி வாக்கைக் கேட்டார்.
பிரான்சிஸ் எங்கு  செல்கிறாய்? என்றது அசிரீரி.
நான் அப்பூலியாவில் போருக்குச் செல்கிறேன் என்றார் பிரான்சிஸ்.
நீ யாரிடமிருந்து அதிகம் பெற முடியும்? தலைவரிடமிருந்தா? ஊழியக்காரரிடமிருந்தா?
தலைவரிடம் இருந்துதான்.
அவ்வாறு எனில் தலைவரை விடுத்து அவரைச் சார்ந்திருக்கும் ஊழியனை ஏன் தொடர்கிறாய்?
ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விழைகிறீர்?
நீ உன்னுடைய நாட்டிற்குத் திரும்பிச் செல் நீ என்ன செய்ய வேண்டுமென்று உனக்கு அறிவிக்கப்படும். அப்பொழுது அக்காட்சியின் பொருளினை அறிவாய் நீ என்றது அக்குரல். மறுநாள் நினைத்து  வந்த  காரியத்தை  விட்டு விட்டு அசிசி நோக்கித் திரும்பிச் சென்றார். நண்பர்களோடு சேர்ந்து களியாட்டங்களில் ஈடுபடுகிறார். ஆனால் திடீரென இறை அன்பினால் நிரம்பப் பெற்றார். தன்னுள் நிகழ்ந்த மாற்றத்தை மறைக்க முடிந்தும் முடியாது வாணிகத்தில் ஊக்கமிழந்து உலகிலிருந்து சிறிது சிறிதாய் விடுபட்டார். ஸ்பொலெட்டோவில் அந்த இரவைக் கழித்த போது தானாகத் தெரிந்து கொண்ட சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். தனது பழைய ஈடுபாடுகளிலிருந்து தன்னை மீட்டுக் கொண்ட தந்தை பிரான்சிஸ் இப்பொழுது புதிய பாதையை இன்னும் அறிந்து கொள்ளவில்லை. தான் செல்ல வேண்டிய பாதையை இறைவனே அறிவிப்பார் என்ற நம்பிக்கையோடு அவரது குரலை மீண்டும் கேட்கவேண்டுமென்ற ஆவலுடன் தனிமையிலும் செபத்திலும் தவத்திலும் ஈடுபட்டார். தன்னைப்போல் விருப்பு வெறுப்புடைய ஒருவரைத் தனது நண்பராக்கிக் கொண்டார். இருவரும் ஒத்த மனதுடன் குகையை நாடிச் செல்வார்கள். குகையை அடைந்ததும் தந்தை பிரான்சிஸ் இறைவனோடு தனித்திருப்பார். இவருடைய மாற்றத்தைக் குறித்துக் கேட்பவர்களிடம் தன்னுடைய திட்டங்களைத் தன்

நாட்டிலே நிறைவேற்ற அப்பூலியாவிலிருந்து தான் திரும்பி விட்டதாகக் கூறுவார். இல்லையென்றால் தான் மாசுமறுவற்ற ஏழ்மைச் சீமாட்டியைக் குறித்து மீண்டும் பேசுவார்.

**அமைதி**

யாருக்கு நாம் ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அமைதியில் சிந்திப்போம்.

**தொழுநோயாளரைச் சந்தித்தல்:**

முழுமையான தாழ்ச்சியின் வெளி அடையாளமாக அவர் தொழுநோயாளர்களிடம் சென்று இறைவனுக்காக அவர்களுக்குப் பணிவிடை புரிந்து அவர்களின் புண்களின் சீழ்களைச் சுத்தம் செய்து அழுகிய சதையினைக் கழுவித்துடைத்து அவர்களோடு வாழ்ந்தார். மனமாற்றத்தின் முன் அவர்களின் குடிசைகளைக் கண்டவுடனே இரு மைல்களுக்கு முன் தன் மூக்கைப் பொத்திக் கொள்வார். ஆனால் இப்பொழுதோ இறையருளாலும் உன்னத இறைவனின் சக்தியாலும் தொழுநோயாளரைக் கண்டவுடன் விருப்பமுடன் அணுகினார். ஒருநாள் தொழுநோயாளியைப் பார்த்த பொழுது அவரைக் கட்டி அரவணைத்து முத்தமிட்டார். அதன் பிறகு மீட்பரின் இரக்கத்தினால ் தன்னையே முழுவதும் வெற்றி கொண்டார். தொழுநோயாளிகளை முன்பு வெறுத்ததற்காக அவர்களிடம் மன்னிப்பு கேட்டார். அவர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தபின் உதடுகளில் முத்தங்களை ஈந்தபின்தான் விடைபெற்றுச் செல்வார். ஒருநாள் தொழுநோயாளி ஒருவரைக் காண நேர்ந்தது. அவ்விடத்தை விட்டு ஓட நினைத்தார். உடனே மனதை மாற்றிக்கொண்டு குதிரையை விட்டிறங்கித் தொழுநோயாளியைக் கட்டித்தழுவினார். அப்பொழுது ஒருவகையான பேரானந்தம் தன் உடல் முழுவதும் பாய்வதை உணர்ந்தார். கசப்பானவற்றை இனிமையானதாக மாற்றும் இறைவன் அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார். தொழுநோயாளிகள் மத்தியில் சேவை செய்ய விரும்பிய தந்தை பிரான்சிஸ் செபித்துக் கொண்டிருக்கும்போது தன் இதயத்தின் கேள்விகளுக்கேற்ற பதில் கிடைப்பதை உணர்ந்தார். ‘‘ஓ பிரான்சிஸ் என் திருவுளத்தை அறிய விரும்பினால் இதுவரை உன் உடல் விரும்பியபடி அடைய வேண்டுமென விரும்புவதையெல்லாம் வெறுத்துவிடு. இதைச் செய்ய ஆரம்பித்தால் இதற்கு முன் உனக்கு இனிப்பாயிருந்ததெல்லாம், மகிழ்வாயிருந்ததெல்லாம் இனி கசப்பாக மாறும், சகிக்க முடியாததாக மாறும். அதற்குப் பதிலாக இதுவரை கசப்பாக இருந்தவை திருப்தியானவையாகவும், இனிமையானவையாகவும் மாறும் என்பதைப் புரிந்து கொண்டார். அதன்படி தொழுநோயளர்களைப் பார்ப்பதே கசப்பாக இருந்தது. இப்போது இனிமையாக இருந்தது.

**சிந்தனை:**

நமது குழுமத்தில் நமது பணித்தளங்களில் நாம் யாருக்கு எப்படிப் பணி புரிகிறோம்? இக்காலத்தில் HIV நோயாளிகள் அவர்களது குடும்பத்தினர், தொழுநோயாளிகள்,

விபச்சார விடுதி நடத்துபவர்கள், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டோர், திருநங்கையர், பாவத்தில் உழல்வோர் இவர்கள் நடுவே பணிபுரிகிறோமா?

நமது அன்றாட பணிகளான கல்விப்பணி, மருத்துவப் பணி, சமூகப்பணி இல்லப்பணிகள் புரியும் போது நமது மனநிலை என்ன? கட்டாயத்தினாலா? அருவருப்பான மனநிலையா? அரைகுறையாகவா? அழைத்தலை பணயம் வைக்கும் தடுமாறுகின்ற மனநிலையா?

எல்லோராலும் குறைவான மதிப்புள்ளவர்களாகக் கருதப்பட்டுத் தாழ்வாக எண்ணப்படும் ஏழைகள் வலுவற்றோர் நோயுற்றோர் தொழுநோய் கொண்டோர் மற்றும் வழியோரப் பிச்சைக்காரர்கள் இவர்களின் நடுவே வாழும் போது சகோதர்கள் மகிழ்ச்சி கொள்வார்களாக என்று ஆரம்ப ஒழுங்கில் இவர் கொடுத்த அறிவுரைக்குப் பிரான்சிஸ் வாழ்வே சான்றாயிற்று. நம் வாழ்வு சான்று பகருமா?

**பாடல்**

**அறையுண்டவரின் ஆணை**

கிபி 1205-ல் அசிசி நகரத்திலிருந்து ஒரு கி.மீட்டர் தொலைவில் சந் தமியானோ என்ற துறவிகள் இல்லம் இருந்தது. அங்கு ஒலிவ மரங்களின் நடுவே பாழடைந்து கிடந்த பலிபீடத்தின் மேல் பைசன்டைன் கிறிஸ்தவர்களால் அமைக்கப்பட்ட பாடுபட்ட சுரூபம் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஆலயம் பாழடைந்திருப்பினும் கிறிஸ்தவ மக்களின் ஆதரவாலும் அவ்வாலயத்திற்குரிய சொத்துக்களினாலும் அங்கு ஒரு குருவானவர் வாழ்ந்து வந்தார். பிரான்சிஸ் ஒருநாள் அதன் வழி செல்லுகையில் அவ்வாலயத்தைக் கண்டு தூய ஆவயின் ஏவுதலால் அவ்வாலயத்திற்குச் சென்று சிலுவையின் முன் மண்டியிட்டு வணங்கி செபித்தார். அவ்வாறு செபித்துக் கொண்டிருக்கும் போது இதுவரை கேள்விப்படாத நிகழ்வு நடந்தது. வரையப்பட்ட சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் உருவம் தன் உதடுகளை அசைத்துப் பேசியது. அவருடைய பெயர் சொல்லி அழைத்து பிரான்சிஸ் அழிந்து கொண்டிருக்கும் எனது வீட்டை சரி செய் என்ற குரலைக் கேட்டவுடன் திகிலுடனும் நடுக்கத்துடனும் பிரான்சிஸ் எழுந்து இக்கட்டளைக்குக் கீழப்படிந்து இதற்காகத் தன்னையே தயார்படுத்தினார். இந்நிகழ்ச்சிகளுக்குப்பின் அவரது ஆன்மாவில் சிலுவையில் அறைந்த கிறிஸ்துவின் மட்டில் ஆழ்ந்த பக்தி உண்டாயிற்று. இந்நிகழ்விற்குப்பின் தன் அன்பர் தன்னிடம் பேசியபின் அவரது ஆன்மா உருக ஆரம்பித்தது. இதன் பின்னர் ஆண்டவருக்காக அழுவதிலிருந்து அவரைக் கட்டுபடுத்த முடியவில்லை. தனக்கென்று எந்த ஆறுதலையும் அடைய விரும்பவில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் காயங்கள் எப்பொழுதும் அவர் நினைவில் இருந்தன. தன் நெருங்கிய நண்பரிடம் இதைப் பற்றிக் கூறும் போது அவரும் கண்ணீர் விடுவார்.

**பாடுகளின் பாடல்**

**தன்னையே வெறுமையாக்கல்**

ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு பிரான்சிஸ் அவர்கட்கு எவ்வித தடையும் இல்லாததால் தன் இல்லத்திற்குச் சென்று அழகிய ஆடைகளை மூட்டையாகக் கட்டிக் குதிரையின் மேல் வைத்து சிலுவை அடையாளம் வரைந்து கொண்டு குதிரையின் மீது தாவினார். பொலிங்கோ நகர் நோக்கி விரைந்து ஆடைகளை விற்றுப் பொருட்கள் வாங்கித் தன் குதிரைகளையும் அவர்களிடம் விற்றார். சந்தமியானாவிற்கு திரும்பி வந்து அங்குள்ள குருவானவரின் கரங்களை முத்தமிட்டு ஆலயத்தைப் பழுது பார்க்கும் பொருட்டுத் தன்னிடமுள்ள பொருட்களை அவரிடம் கொடுத்தார். பிரான்சிஸ் மேல் முழு நம்பிக்கை இல்லாததால் அப்பொருட்களை குருவானவர் ஏற்க மறுத்தார். அப்பொருட்கள் கரங்களுக்குச் சுமையாகவும் விரல்களைச் சுட்டெரிப்பது போலும் அவருக்குத் தோன்றியதால் அதைத் தூக்கி ஒரு மூலையில் வீசி எறிந்தார்.

இதனையறிந்த பீட்டர் பெர்னார்தோன் பிரான்சிஸை அழைத்துச் செல்வதற்காக சங்தமியானோ நோக்கிப் புறப்பட்டார். ஆனால் தன் நண்பர் ஒருவருக்கு மட்டும் தெரிய இல்லத்திற்கு அடியில் உள்ள அகழி ஒன்றில் மறைந்து கொண்டார். மறைந்து வாழும் வாழ்வில் இதுவரை காணாத இன்பங்களையும் மன அமைதியையும் இறைவன் இவருக்கு அளித்தார். மனதைத் திடப்படுத்தி ஒளிந்து வாழ்தலை விடுத்து நகரத்திற்குச் சென்றார்.

களைசொட்டும் இவரது முகப்பொலிவைக் கண்டிருந்த மக்கள் இப்பொழுது களையிழந்து காணப்படும் இவரைப் பைத்தியம் என்று எண்ணி கற்களையும், சேற்றையும் இவர் மேல் வாரி இறைத்தனர். மக்கள் கூக்குரலைக் கேட்ட இவரது தந்தை வீதியிலே நடப்பதைக் கண்டு கோபமுற்று பிரான்சிஸ் மேல் பாய்ந்தார். பிரான்சிஸை இழுத்துவந்து சங்கிலியால் பிணைத்து இருட்டறைக்குள் தள்ளினார். தந்தையின் வழிக்கு எவ்விதத்திலும் பிரான்சிஸ் இணங்க மறுத்தார். பிரான்சிஸின் தாய் அவர்படும் துன்பங்களைக் கண்டு மனமிளகி அவரை விடுதலை செய்தார். வெளியூரிலிருந்து திரும்பிய தந்தை மகனைனக் காணாது கோபத்தோடு சங்தமியானோ நோக்கி சென்றார். ஆனால் பிரான்சிஸ் கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பின் காரணமாய் எவ்வித ஆணைகளுக்கும் இனி தான் அஞ்சப் போவதில்லை என தந்தையிடம் எடுத்துரைத்தார். பிரான்சிஸ் விற்பனை செய்த ஆடைகளின் பணத்தைப் பெறுவதில் கருத்தாயிருந்தார். நகர அதிகாரி இல்லத்திற்கு சென்று தனது மனக்குறைகளைக் கூறித் தன் மகனைக் காவலில் வைப்பதற்குரிய ஆணைப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார். எதையுமே மனதிற் கொள்ளாத பிரான்சிஸ் தான் இறைவனோடு ஒன்றித்த காரணத்தினால் நகர அதிகாரிகளுக்குத் தான் கட்டுப்பட்டவனல்ல எனக் கூறிவிட்டார். எனவே பிரான்சிஸை திருச்சபை மட்டுமே கட்டுப்படுத்தமுடியும் என எண்ணினார். எனவே பீட்டர் பெர்னார்தோன் ஆயரான பிடோவிடம் முறையிட்டுச் சபைக்கு வரவழைத்தார். ஆயர் பிரான்சிஸிடம் இறைவன் மீது நம்பிக்கை வைத்து துணிவோடு இரு ‘‘நீ திருச்சபைக்குப் பணிபுரிய விரும்பினால் உன்னிடத்தில் இருக்கும், உனக்கு உரிமை இல்லாததை உன் தந்தையிடம் திரும்பத் தந்துவிடு . அதன்மூலம் அவரது கோபத்தைத் தணித்துவிடலாம்’’என்றார். பிரான்சிசும் தன்

ஆடைகளைக் களைந்தார். தனது தந்தையிடம் சேர்த்துள்ள அனைத்தையும் துறந்தார். இவ்வாறு தன்னையே வெறுமையாக்கி இறை திருவுளத்திற்கு பணிந்து இறைவனிடம் செபித்தலிலும், தவம் செய்வதிலும் தனிமையிலும் இறைவனுக்குப் பணிந்திருந்தார்.

**சிந்தனை:**

ஏழ்மை என்னும் வார்த்தைப்பாட்டை எடுத்த நான் அதை வெறும் வார்த்தைகளாக்கி அதனைக் கடைபிடிப்பதைப் பாடுகளாக நான் நினைக்கின்றேனா?

நம் வாழ்வின் நிலையை உணர இறைதூண்டல் ஏற்படும்போது அதை உணர, உணர்ந்து செயல்பட மறுக்கிறோமா?

நம்மிடம் இருக்கும் ஆடம்பரப் பொருள்கள், ஒழுங்கு மீறிய பணபுழக்கங்கள் பிறரை ஏமாற்றி பொருள் சேகரிக்கும் தன்மை, நம் பயன்பாட்டில் உள்ள பொருட்களின் தன்மை இவற்றைச் சிந்தித்து ஏழ்மை வாழ்வில் மறுமலர்ச்சி பெறுவதே மனமாற்றம் என்பதை உணர உறுதி எடுப்போமா?

**தேடலின் நிறைவு**

1209 ஆம் ஆண்டு நற்செய்தியாளர் புனித மத்தேயு திருவிழா அன்று போர்சியுங்குலா திருப்பலியின்போது ஆலயத்தில் நற்செய்தி வாசகத்தின் போது (1செலோனா 22 பக்கம் 246) மக்களுக்குப் போதிப்பதற்காக ஆண்டவர் தம் சீடர்களை அனுப்பிய நிகழ்வு வாசிக்கப்பட்டது. அப்பொழுது இறைவனின் புனித மனிதர் அங்கு உதவி செய்து கொண்டிருந்தார். திருப்பலி முடிந்த பின்பு குருவானவரிடம் சென்று இவ்வாசகப் பகுதியை விளக்கிக் கூறுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டார். அப்படியே அவர் விளக்கிக் கூறிய பின்பு கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் பொன்னோ வெள்ளியோ பணமோ உணவோ கைத்தடியோ மிதியடியோ இரு அங்கியோ எடுத்துச் செல்லக்கூடாது. ஆனால் அவர்கள் இறையரசு பற்றியும் தவத்தைப் பற்றியும் போதிக்க வேண்டுமென்று கூறியுள்ளதை குருவிடம் கூறினார். (மத்:10:7-13) விளக்கத்தைக் கேட்டவுடன் பிரான்சிஸ் துள்ளிக் குதித்தவராய் This is what I wish; this is what I seek: this is what I long to do with all my heart; இதையே நான் விரும்பினேன்: இதையே நான் தேடினேன்: அதற்காகவே நான் ஏங்கினேன் இதையே என் முழு இதயத்தோடு செய்ய ஏங்கிக் கொண்டிருந்தேன் என்றார். இதன்பின் புனித தந்தை மகிழ்ச்சியால் நிறைந்தவராய் தான் செவிமடுத்த இந்த வாழ்வின் வார்த்தைகளை நிறைவேற்ற விரைந்தார். இதனை நிறைவேற்ற எவ்விதத்திலும் வருத்தமடையவில்லை. அவர் உடனே தன் பாதத்தில் இருந்த மிதியடிகளைக் கழற்றினார். தன் கரத்தில் இருந்த கைத்தடியை எறிந்தபின் ஒரு அங்கியைத் தயாரித்தார். இதன்முலம் தனக்கு ஏற்படும் சோதனைகளிலிருந்து வெற்றி பெறலாம் என நினைத்தார். இந்த அங்கியும் முரட்டுத்துணியாலானது. இதனால் தன் சோதனைகளையும் சிலுவையில் அறையவும் விரும்பினார். ஆகவே மிக எளிமையான ஏழ்மையான உலக மனிதருக்குக்

கவர்ச்சியாகத் தோன்றாத அங்கியை தயாரித்தார். தான் கேட்ட மற்ற அனைத்தையுமே அதிகக் கவனத்தோடு கடைபிடிக்க விரும்பினார். கவனத்தோடும் மிக மரியாதையோடும் அறிந்து கொள்ள ஆவல் கொண்டார். ஏனெனில் அவர் இறைவார்த்தையைக் கேட்டும் கேளாமலும் அல்ல ஆனால் அனைத்தையும் தகுந்த ஞாபக சக்தியுடனும், கேட்ட வாரத்தையின் ஒவ்வொரு எழுத்தையும் அப்படியே செயல்படுத்த ஆவல் கொண்டார்.

**சிந்தனை:**

- ❖ என் வாழ்வின் தேடல் திருப்புமுனை இவற்றிற்கான வழிகளை இறைவார்த்தையில் தேடுகிறேனா?
- ❖ இறைவார்த்தைகள் திருப்பலியில் அல்லது மற்ற நேரங்களில் வாசிக்கப்படும்பொழுது அதில் எனக்குரிய இறைச்செய்தி எது என கவனமுடன் கேட்கிறேனா? இறைவார்த்தையைக் கேட்கும் போதும், படிக்கும்போதும் அவை விடுக்கும் உள்ளார்ந்த அழைப்பிற்குச் செவிமடுக்கிறேனா? அதற்கேற்ற முறையில் என் வாழ்க்கை முறைகளை மாற்றியமைக்கிறேனா?
- ❖ இறைவார்த்தைகளால் பிறருக்கு நல்வாழ்வு அளிக்க முயற்சி செய்கிறேனா? தந்தை பிரான்சிஸ் போன்று துறவற வாழ்வில் இதையே நான் விரும்பினேன் இதையே நான் தேடினேன் என்று துறவற அழைத்தலை ஏற்ற நான் அழைத்தலை காத்துக்கொள்ளும் விதம் என்ன? அழைத்தலைப் பலவீனப்படுத்தும் செயல்களை விட்டு விலகுகிறேனா?

**முடிவுரை:**

நமக்குள் ஒளிந்திருக்கும் இறைவனை வெளிக்கொணர்வோம். தேவை இல்லாதனவற்றைச் செதுக்கி எடுத்து உள்ளேயிருக்கும் இறைவனை வெளிக்கொணர்வோம். சபை நமக்குத் தந்திருக்கும் இந்நாட்களில் நம் சபை முன்னோர் வாழ்ந்து காட்டியதும் நம்மில் ஒளிந்திருப்பதுமான தந்தை பிரான்சிஸ்குவின் ஏழ்மை, எளிமை, தோழமை, செபத்தின் ஆவி, உழைப்பு இவற்றைப் புதுப்பிக்க முனைவோம். நற்செய்தி கூற்றின்படி மனமாற்றம் என்பது தவத்தின் அடையாளமே. தவம் என்பதன் பொருள் மனமாற்றமே. மனிதனின் முழுவதுமான உறுதியான புதுப்பித்தலின் கடவுளை எல்லா நிலையிலும் வெளிப்படுத்துதலுமே என்பதை உணர்ந்து புதிய மனிதர்களாக வாழ புதிய வாழ்வில் நுழைவோம்.

***Prepared by***

SR. MARY FRIDOLINE (492) and SR. SAGAYA CLARA (657)